
# திராவிடத்தால் வாழ்கிறோம்

775

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்



## மரபுகளை உடைக்கும் பெரியாரியப் பெண்கள்!

கல்வி, வேலை வாய்ப்பு, வழிபாட்டு உரிமைகளில் இனி பெண்களை ஒருபோதும் விலக்கி வைக்க முடியாது என்ற களச்சூழலை தமிழ்நாடு சாத்தியப் படுத்தியிருக்கிறது என்றாலும், இறுதி நிகழ்வுகளில் இன்னமும் பெண்களுக்கு ஓர் எல்லைக்கோடு வரையறுக்கப்பட்டிருக்கிறது. ‘பெண்கள் சுடுகாட்டிற்குச் செல்லக்கூடாது, கொள்ளி வைக்கும் உரிமை கிடையாது’ என்ற கட்டுப்பாடுகள் இந்தக் காலத்திலும் தொடரத்தான் செய்கின்றன. ஆனால், சேலம் மாவட்டம் கொளத்தூரில் அத்தகைய கட்டுப்பாடு களைத் தகர்த்து, சடங்கு - சம்பிரதாயங்களைப் பின்பற்றாமல் பெண்களே இறந்தவர்களின் உடலை சுடுகாடு வரை சுமந்து சென்று, இறுதி நிகழ்வில் முழுமையாகப் பங்கெடுக்கின்றனர்.

இதுகுறித்து, ஆங்கில ‘இந்து’ நாளேட்டில் சமீபத்தில் செய்தி வெளியாகியுள்ளது. அச்செய்தியில், “2004-ஆம் ஆண்டில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் உறவினர் ஒருவர் இறந்தபோது, அவரின் மகளே சுடுகாடு வரை சென்று தீ மூட்டியுள்ளார். அதன்பிறகு 2013-இல் கொளத்தூர் மணியின் தாயார் இறந்தபோது, சடங்குகள் இன்றி, அவரது தங்கை தீ மூட்டியுள்ளார். பிறகு கொளத்தூர் மணியைப் பின்பற்றும் அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், தங்களது குடும்பத்தில் யாராவது இறந்தால், சடங்கு-சம்பிரதாயங்களைத் தவிர்த்து, பெண்களையே சுடுகாடு வரை உடலைச் சுமக்கச் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். சேலம் மாவட்டத்தில் மட்டும் கடந்த 15 ஆண்டுகளில் 100-க்கும் மேற்பட்ட சடலங்களைப் பெண்களே சுமந்து சென்று அடக்கம் செய்துள்ளனர்” என்று கூறப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தைத் தொடர்ந்து, ஈரோடு, கரூர், நாமக்கல், கோவை என அருகாமையில் இருக்கும் மற்ற மாவட்டங்களிலும் இதனை வழக்கமாக்கி வருகின்றனர், பெரியாரியப் பெண்கள். மரண நிகழ்வுகளிலும் மரபின் பெயரிலான பிற்போக்குத்தனங்கள் உடைபடுகின்றன.

## ப்ளாஷ்பேக்



### முதல் சமத்துவபுரமும் நானும்...



எம்.முத்துராமலிங்கம்

நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் ‘தமிழகத்தின் முதல் சமத்துவபுரம்’ திருமங்கலத்தில் அமைந்தது. அதனை 97-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நேரடியாக வந்து திறந்து வைத்தார். இந்த விழாவில், அன்றைய சபாநாயகர் பண்பாளர் பி.டி. .ஆர்., அமைச்சர்கள் அண்ணன் ஆற்காட்டார், தமிழ்க்குடிமகன், சமயநல்லூர் செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் காசி விஸ்வநாதன் ஐ.ஏ.எஸ்., இவர்களுடன் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், நானும் கலந்துகொண்டு பெருமை கொண்ட சம்பவம்.

**- எம்.முத்துராமலிங்கம், மாநில இணைச் செயலாளர், கழக விவசாய அணி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கழக தொழிற்சங்கக் கட்டமைப்புகள்

1953-ஆம் ஆண்டு மே 31-ஆம் தேதி, அரக்கோணத்தில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில், கழகம் நேரடியாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, அடுத்த 2 ஆண்டுகளில் பல தொழிற்சங்கங்களை கழகத்தினர் நிறுவினர். அதையடுத்து, 1955-ஆம் ஆண்டு மே தினக் கொண்டாட்டத்தினைத் தமிழ்நாடு முழுவதும் கழகம் எழுச்சியுடன் கொண்டாடியது.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர்

53

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

# மறுமலர்ச்சிக்கு வித்திட்ட திராவிட தேசியம்!




மிக்கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த சாதிப்பாகுபாடு சென்னைவாசிகளுக்குச் சமூக மாற்றங்களையும் புதிய சிந்தனைகளையும் எண்ணிப் பார்க்கத் தடையாக இருந்தது. சனாதன சாதி அமைப்புடன் ஒட்டுண்ணியாக அமைந்திருந்த கடுமையான பணிமுறைகள் கூட்டுறவுக்குத் தடையாகவும் முன்னேற்றத்தைப் பாதிப்பதாகவும் சுதந்திரச் சிந்தனையை முடக்குவதாகவும் இருந்தன. அதனால் அவர்கள் ஆணைக்கு அடங்கி அடிமையாக, அமைதியாக வாழ்பவர்களாகவே இருந்தார்கள் என்ற கருத்து நிலவியது.

சென்னையைப் பொறுத்தவரை பார்ப்பனர்கள் தாங்கள் உயர்சாதி என்ற சமூக நிலையால் கல்வி பெறும் உரிமைகளில் முன்னிடத்தில் இருந்தமையாலும், அதன் விளைவாக அரசு அதிகாரிகளுடன் ஏற்பட்ட நெருக்கத்தாலும், அரசின் முடிவுகளில்கூட தலையிட்டுக் கருத்துச் சொல்லும் நிலை பெற்றிருந்தார்கள். எல்லாத் துறைகளிலும் விரவி நின்ற தங்கள் ஏகபோகத்தால் மற்ற சாதியினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் வல்லமை பெற்றவர்களாகவும் இருந்தார்கள்.

சாதி அடுக்கின் மேல்நிலையில் பார்ப்பனர்கள் இருந்தமையால், தங்கள் சாதியாதிக்க அமைப்பைக் கட்டிக் காக்கும் அதே நேரத்தில், சமூகத்தின் மற்ற மக்களிடையே தங்களைப் பாதிக்கக் கூடிய எத்தகைய மாறுதலும் ஏற்பட்டு விடாமல் பாதுகாத்துக் கொள்வதிலும் கவனமாக இருந்தார்கள். அதன் விளைவாய் பார்ப்பனர் அல்லாதாருக்கும் பார்ப்பனர்களுக்கும் சமூகத் தொடர்புகளில் பெரிய இடைவெளி இருந்தது. அரசு வேலைவாய்ப்புகளில், கல்வியில் இந்த இடைவெளி மிக வெளிப்படையாகத் தெரியும் அளவுக்கு அதிகமாக இருந்தது.

இப்படி இருந்த சூழலில் ‘1900-களில் தோன்றிய திராவிட தேசியம் எனும் இன உணர்வு என்ற பெரும்புயலும், அந்தப் புயலின் விளைவாகத் தோன்றிய வகுப்புவாரி உரிமையும் சென்னை மாகாணத்தை 20 ஆண்டுகளில் மாற்றின’ என்கிறார் நம்பி ஆரூரான்.

### திராவிட உணர்வு

தேசிய உணர்வு உருவாவதற்கு, மக்களுக்குள் ஒரு பொதுப் பற்றுக்கோடு இருக்கவேண்டும். பொதுவான மொழி, இலக்கியம், அரசியல், பொருளாதாரக் கொள்கை, மத நம்பிக்கையில் இணக்கமான சூழல், பொது அரசு, வரலாற்று மரபு, பொது எதிரி, தகவல் தொடர்பு வளர்ச்சி போன்ற பல காரணங்களினால் குழு மனப்பான்மை உருவாகி வளரும்.

மொழியியல் வல்லுனராகிய இராபர்ட் கால்டுவெல் தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசுவோரைக் குறிக்க ‘திராவிடர்’ என்ற சொல்லைப் பயன்படுத்தினார். தனித்து விளங்கும் இந்நான்கு மொழிகளும் பொதுவான ஒன்றிலிருந்தே தோன்றி வளர்ந்தன. திராவிட எனும் சமஸ்கிருதச் சொல்லிருந்தே திராவிடர் எனும் சொல் தோன்றியதாக அவர் கருதினார்.

திராவிட மொழிகள் சமஸ்கிருதச் சார்பற்றுத் தனித்து இயங்கும் என்ற கருத்தை முன்வைத்த கால்டுவெல் ‘பழங்காலத் திராவிடர்களின் நாகரிகம் ஆரியர்களுக்கு முந்தைய நாகரிகம்’ என்றார். ஆனால் கிருஷ்ணசாமி அய்யங்கார் எனும் பார்ப்பன வரலாற்று அறிஞர் ‘தென்னிந்தியா அடர்ந்த காடாக இருந்தது. ஆரியர்கள் இங்கே நுழைந்தபின்னர் தான் நாகரிகம் வளர ஆரம்பித்தது’ என்றார். அவரைப்போலவே மற்ற பார்ப்பன அறிஞர்களும் திராவிட மொழிகள் பிராகிருத மூலத்திலிருந்து தோன்றியவை என்று கூறினர்

இதை நாவலர் சோமசுந்தர பாரதியார் மறுத்தார். “ஆரியர்கள் வருவதற்கு முன்னரே தங்களின் பூர்வீக பூமியான தென் இந்தியாவில் தமிழர்கள் சிறந்த வளத்துடனும் சிறப்பான நாகரிகத்துடனும் வாழ்ந்தனர். தென்னகத்திற்கு பாதைகள் அற்ற அடர்ந்த காடுகள் வழியே ஆரிய அந்நியன் வந்தான். பாண்டியன் அரசவை அவனைக் கவர்ந்தது. ஆனால் அவனால் தமிழ்நாட்டு விருந்தோம்பலின் பெருமையை உணர முடியவில்லை. இங்கே உள்ள வெம்மை அவனைச் சுட்டெ ரித்தது” என்றார் அவர்.

### உருவான கேள்விகள்

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கல்வி கற்கும் வாய்ப்புப் பெற்ற பார்ப்பனரல்லாத தலைவர்கள் வரலாற்றில் திராவிட நாகரிகத்தைப் பற்றி தாழ்வாக எழுதப்பட்டுள்ளது குறித்து வினா எழுப்பத் தொடங்கினர். பார்ப்பனர்கள் தாங்கள் பெற்ற கல்வியின் மூலம் பல்கலைக் கழகத்தில் உயர்ந்த பதவியிலிருந்து எழுத்தர் பதவி வரை அனைத்துப் பதவிகளையும் தன்வயப்படுத்தினர். பார்ப்பனர்கள் அரசுப் பணிகளில் பெரும்பாலானவற்றை ஆக்கிரமித்துக் கொண்டதற்குக் காரணம் அவர்களது கல்வியறிவு ஆகும்.

கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட பார்ப்பனரல்லாதார் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் கல்வி கற்க ஆரம்பித்தனர். ஆங்கிலக் கல்வி பெற்றதுதான், பார்ப்பனர்கள் வாழ்க்கையின் எல்லா வகைகளிலும் மேன்மை பெற்று விளங்குவதற்குக் காரணமாயிற்று. குறிப்பாக அரசு அலுவலகங்களில் பார்ப்பனர்கள் உயர்பதவி வகிப்பதற்குக் கல்விதான் முக்கியக் காரணமாக இருக்கிறது என்பதைப் பார்ப்பனரல்லாதார்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்தனர். கல்வியில் பின்னடைந்து இருப்பதால்தான் சமூகத்தில் நல்ல மதிப்புமிக்க இடத்தைப் பெறமுடியவில்லை என்று புரிந்துகொண்ட பார்ப்பனரல்லாத மக்கள், அதற்குரிய முயற்சிகளை எடுத்தனர்.

> **கல்வியில் பின்னடைந்து இருப்பதால்தான் சமூகத்தில் நல்ல மதிப்புமிக்க இடத்தைப் பெறமுடியவில்லை என்று புரிந்துகொண்ட பார்ப்பனரல்லாத மக்கள், அதற்குரிய முயற்சிகளை எடுத்தனர்.**

1909-இல் பி.சுப்பிரமணியம், எம்.புருஷோத்தம் நாயுடு எனும் இரு வழக்கறிஞர்கள் இணைந்து ‘தி மெட்ராஸ் நான் பிராமின் அசோசியேஷன்’ என்கிற ஓர் அமைப்பைப் பார்ப்பனர் அல்லாத சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக உருவாக்கினர். அதன்பின்னர் 1912-இல் ‘தி மெட்ராஸ் யுனைடெட் லீக்’ என்கிற அமைப்பு உருவாக்கப்பட்டது. பின்னர் திராவிடர் சங்கமாக மாற்றமடைந்தது. இதற்கு முன்பே 1892-இல் ‘ஆதிதிராவிட ஜனசபா’ துவங்கப்பட்டது. திராவிடர் சங்கம் பார்ப்பனரல்லாத மாணவர்கள் தங்கிப் படிக்க சென்னையில் ‘திராவிடன் இல்லம்’ என்ற பெயரில் விடுதி ஒன்றை நிறுவினர்.

இவ்விடுதி டாக்டர் சி.நடேசனாரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கியது. 1916-இல் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் உள்ளிட்ட பார்ப்பனரல்லாத தலைவர்கள் இணைந்து தென்னிந்திய மக்கள் சங்கத்தைத் தோற்றுவித்தனர். பார்ப்பனரல்லாதவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு நாளேடுகளை நடத்துவது என்று தீர்மானித்தனர். ‘ஜஸ்டிஸ்’ இதழ் 26.02.1917 அன்று வெளியிடப்பட்டது. தென்னிந்திய மக்கள் சங்கத்தின் சார்பாகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதில் பார்ப்பனர்களைத் தவிர தென்னிந்தியாவில் உள்ள எவரும் உறுப்பினர்களாக இணையலாம் என்று அறிவிக்கப்பட்டது.

1917-ஆம் ஆண்டு முதல் எண்ணற்ற பார்ப்பனரல்லாதார் மாநாடுகள் மாவட்டந்தோறும் நடைபெற்றன. அதில் பார்ப்பனரல்லாத தலைவர்கள் பங்கேற்று திராவிட இன உணர்வை வளர்த்தெடுத்தனர். பார்ப்பனரல்லாதார்க்குச் சட்டமன்றத்தில் மேற்கொள்ளப்படும் எல்லாவித சீர்திருத்தத் திட்டங்களிலும் உரிய பிரதிநிதித்துவமும், எல்லா நிர்வாகத் துறைகளிலும் சரியான பங்களிப்பும் தரப்பட வேண்டும் என்று மாநாட்டுத் தீர்மானங்கள் கோரின.

...குரல் ஒலிக்கும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131